## 142. ஜீவனுள்ள ஆலயமாக எங்களை

### பல்லவி

ஜீவனுள்ள ஆலயமாக எங்களை
தெரிந்து கொண்ட என் இயேசுவே
எனக்குள் தங்கிடும் எனக்குள் உலாவிடும்
என்னில் வாசம் பண்ணிடும்

### சரணங்கள்

1. அஸ்திபாரமாகிய என் இயேசுவே
உம்மேலே கட்டப்படுகின்றோம்
ஆவிக்குரிய மாளிகையாய் மூலைக்கல்லின்மேலே
எழுப்பப்பட்டு வருகின்றோமே
- ஜீவனுள்ள

2. கல்வாரியில் பிறந்த சபையை
உமது இரத்தத்தால் மீட்டிரே
உமது தழும்புகளால் எங்களை குணமாக்கி
ஆரோக்கிய சபையாக்கினீர்
- ஜீவனுள்ள

3. திருசபையின் தலையாக இருப்பவர்
என் இயேசு ராஜா நீரே
உமது உறுப்புகளாய் எங்களை மாற்றினீர்
நீரே தலையானீரே
- ஜீவனுள்ள

4. சாத்தானின் அதிகார வல்லமைகள்
அனைத்தையும் உறிந்துகொண்டீர்
என் இயேசு ராஜனே உந்தன் சபைக்கு
வல்லமை அதிகாரம் தந்தீரே
- ஜீவனுள்ள